# 2024

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## ஆண்டிறுதி செயலாற்றுகை அறிக்கை
## Annual Performance Report

**නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව**
**சட்ட வரைஞர் திணைக்களம்**
**Legal Draftsman's Department**

# செயலாற்றுகை அறிக்கை
# 2024

## செலவினத் தலைப்பு இல.230

**சட்ட வரைஞர் திணைக்களம்**

இல. 80, அதிகரண மாவத்தை,
கொழும்பு 12

# 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்தச் செயல்நிறைவேற்றுகை அறிக்கை

## சட்டவரைஞர் திணைக்களம்

<u>**செலவினத் தலைப்பு இல. 230**</u>

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01 - நிறுவனஞ்சார் தோற்றுருவம்/நடைமுறைப்படுத்துகையின் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் தொலை கண்ணோக்கம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயல்நிறைவேற்றுகை

அத்தியாயம் 04 - செயல்நிறைவேற்றுகைச் சுட்டிகள்

அத்தியாயம் 05 - நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) எய்துகின்ற செயல்நிறைவேற்றுகை

அத்தியாயம் 06 - மனித வளத் தோற்றுருவம்

அத்தியாயம் 07 - இணங்கியொழுகுகை அறிக்கை

**அத்தியாயம் 01 -நிறுவனஞ்சார் தோற்றுருவம்/நடைமுறைப்படுத்துகையின் பொழிப்பு**

1.1 அறிமுகம்

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள்

1.3 பிரதான பணிகள்

1.4 ஒழுங்கமைப்புச்சார் விளக்கப்படம்

## 1.1 அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களமானது,“A” தரமளிக்கப்பட்ட ஓர் அரசாங்கத் திணைக்களமாகும். அமைச்சுக்களின் விடயங்களும் கடமைகளும் தொடர்பில் 2020.08.09 ஆந்தேதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதியமைச்சின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முடிபுகளுக்கும் இணங்கப் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுகின்ற அந்த நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வுசெய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதன்மூலம் அவசியமான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதனையும் உள்ளடக்கும். அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் வரைதல் தொடர்பாக இத்திணைக்களமானது பல்வேறு அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

**1.2**

## தொலைநோக்கு

பல்வேறு அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதன்மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக் குடியரசிற்குத் துணைபுரிதல்.

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றும்போது அரசியலமைப்பிற்கிணங்க சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சட்டவாக்கங்களை வரைதல்.

**1.3 சட்டமூலங்களை வரைதல் தொடர்பாகத் திணைக்களத்தின் பிரதான பணிகள்:-**

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதல்;

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து) அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்;

(3) சட்டங்களை வரைதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்;

(4) அவசியமானவிடத்து மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்;

(5) தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலங்களை (கூட்டிணைத்தற் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்;

(6) அமைச்சரவையின் அங்கீகாரத்தின்மீது, உத்தேசிக்கப்பட்ட சட்டவாக்கங்களின்மீதான குழுக்களில் பங்குபற்றுதல்.

சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும்,மாகாணசபை நியதிச்சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இது, அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கைகள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின்கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின்மீது தயாரிக்கப்படுகின்றமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையின்மீதும்அத்தகைய கோரிக்கைகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன்மீதும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம், கோரிக்கை விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## 1.4 ஒழுங்கமைப்புச்சார் விளக்கப்படம்

**1.4 விளக்கப்படம்**



## அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

### முன்னேற்றப் பரிசீலனை –2024.01.01 முதல் 2024.12.31 வரை

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | * (9) | | (10) | * (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | 2024.01.01. அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினது அல்லது ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் மற்றும் அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவுள்ள எஞ்சியுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன் கொணரப்பட்ட மீதி) | 2024.01.01 அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்தி செய்யப்பட்டிராத கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன் கொணரப்பட்ட மீதி) | இந்த ஆண்டினுள் திறத்தவர்களிட மிருந்து பெறப்பட்ட புதிய கோரிக்கை களின் எண்ணிக்கை | இவ்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளவையும் ஆனால் மேலதிகத் திருத்தங்களுக்காக மீள அனுப்பப்பட்டவையுமான கோரிக்கைகளின் எண்ணிக்கை | மொத்தம் (2+3+4+5) | 2024.12.31 அன்றுள்ளவாறு மூன்று மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை (பலதடவைகள் மூன்று மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிவரைவுகளின் ஒவ்வொரு சந்தர்ப்பமும் இதன்கண் உள்ளடக்கப் பட்டுள்ளது) | நீண்ட காலப்பகுதிக்காக அறிவுறுத்தல்களின்மையால் மூடப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 2024.12.31 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட வரைவுகளாகச் சமர்ப்பிக்கப்பட்டவையும், ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அல்லது ஏனைய அமைச்சுக்களின் மற்றும் திணைக்களங்களின் அவதானிப்புகளையும் அறிவுறுத்தல்களையும் காத்திருக்கின்றவையுமான கோரிக்கைகளின் எண்ணிக்கை | | மொத்தம் (7+8+9) | 2024.12.31 அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்தி செய்யப்பட்டிராத கோரிக்கை களின் எண்ணிக்கை | நூற்றுவீதத்தில்(%) உள்ளபடியான வெளியீடு (10/6)*100) |
| | | | | | | | | **சட்டத் துறைத் தலைமையதிபதி | ஏனைய அமைச்சுக்களும் மற்றும் திணைக்களங்களும் | | | |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங் களும் திருத்தச் சட்டவாக்கங்களும்) | 132 | 29 | 82 | 7 | 250 | 60 | 25 | 1 | 161 | 247 | 3 | 99% |
| தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல்) | 33 | 9 | 13 | 2 | 57 | 8 | 49 | 00 | | 57 | 00 | |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் மீளாய்வு | 113 | 58 | 149 | 10 | 330 | 124 | 17 | 147 | | 288 | 42 | 87% |
| மாகாண சபைகளின் நியதிச்சட்டங்கள் | 11 | 0 | 0 | 0 | 11 | 0 | 4 | 7 | | 11 | 0 | 100% |
| மொத்தம் | 289 | 96 | 244 | 19 | 648 | 192 | 95 | 316 | | 603 | 45 | 93% |

*** 9 ஆம், 11 ஆம் நிரல்களுக்கு இயைபான விளக்கக்குறிப்பு அடுத்த பக்கத்தில் உள்ளது.**

**** புதிய சட்டவாக்கங்களையும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களையும் சட்டமாக்குவதற்கான சட்டமூலங்கள் மட்டுமே இத்திணைக்களத்தினால் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு நேரடியாக ஆற்றுப்படுத்தப்படுகின்றன.**

*குறிப்பு:-

**<u>ஆவணத்தின் நிரல் (9)– முதனிலை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட வரைவுகளாகச் சமர்ப்பிக்கப்பட்டு, சட்டத்துறைத் தலைமையதிபதியிடமிருந்து அல்லது வேறு அமைச்சுக்களிடமிருந்தும் திணைக்களங்களிடமிருந்தும் அவதானிப்புகளையும் அறிவுறுத்தல்களையும் காத்திருக்கும் கோரிக்கைகளின் எண்ணிக்கை, (11) - அவை தொடர்பில் வரைதல் பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகளின் எண்ணிக்கை</u>**

இத்திணைக்களத்தினால் கவனிக்கப்பட்டுப் பூர்த்திசெய்யப்பட்டவையும் இறுதி வரைவாக அனுப்பப்பட்டவையுமான கோரிக்கைகள், முக்கியமாக அறிவுறுத்தல்களைக் கொடுக்கும் முகவராண்மைகள் தமது கொள்கையை அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பதன் காரணமாக மேலதிகத் திருத்தங்களுக்காகப் புதிய அறிவுறுத்தல்களுடன் மீண்டும் அனுப்பிவைக்கப்படுகின்றன.எவ்வாறிருப்பினும்,அத்தகைய கோரிக்கையொன்று பெறப்படும்போது, அது முன்னரே இறுதியாக்கப்பட்டிருப்பதனைப் பொருட்படுத்தாது, இத்திணைக்களம், ஒரு புதிய கோரிக்கைக்குக் கொடுக்கின்ற அதே நேரத்தையும் கவனத்தையும் அதற்காக அர்ப்பணித்து அதனைக் கவனிக்கவேண்டியுள்ளது. மேலும், பூர்த்திசெய்யப்பட்ட வரைவுகளுக்கான அத்தகைய திருத்தங்களுக்கான கோரிக்கைகள், இறுதிவரைவு மும்மொழிகளிலும் அனுப்பப்பட்டபின்னருங்கூட அனுப்பப்படுகின்றனவென்பதுடன், சிலவேளைகளில் இந்நடவடிக்கைமுறை பலதடவைகள் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது. சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

| சட்டமூலத்தின் பெயர் | சட்டமூலம் அனுப்பப்பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை (2024.12.31 ஆந்திகதியன்றுள்ளவாறு) |
|---|---|
| விலங்கு நலம்பேணல் சட்டமூலம் | 21 |
| தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டமூலம் | 24 |
| பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் | 09 |

ஆதலால், இத்திணைக்களத்தினால் கோரிக்கையொன்று கவனிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பினுங்கூட, அது,‘‘பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகளாக’’ இன்னமும் பிரதிபலிக்கப்படக்கூடும்.
அதற்கிணங்க,

**01. சட்டமூலங்கள் (முதன்மைச் சட்டவாக்கங்கள் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்கள்)**

பூர்த்திசெய்யப்பட்டிராத சட்டமூலங்கள் தொடர்பான அமைச்சரவை முடிபுகள் முந்தை அமைச்சரவையின் கீழ் பெறப்பட்டிருப்பதால, அத்தகைய கோப்புகள் தொடர்பான மேலதிக ஏற்பாடுகளின் மீதான தேவையான கடிதங்கள் இயைபான அமைச்சுக்களுக்கு அனுப்பப்பட்டு, அவற்றின் பதிலுக்காக காத்திருக்கின்றது.

**02. தனிப்பட்ட உறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்) சட்டமூலங்கள்**

பாராளுமன்றம் 25.09.2024 ஆந்தேதியன்று கலைக்கப்பட்டிருப்பதாலும் தனிப்பட்ட உறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்) சட்டமூலங்கள் தொடர்பான கோரிக்கைகள் காலாவதியாகுகின்றதனாலும், எமது திணைக்களம் அத்தகைய சட்டமூலங்களை மேலும் கவனம் செலுத்த முடியாதிருப்பதால், அத்தகைய கோப்புகள் முடிவுறுத்தப்படுகின்றன.

**03. துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல்**

துணைநிலைச் சட்டவாக்கங்கள் தொடர்பாக மீளாய்வு பூர்த்திசெய்யப்பட்டிராத 42 கோரிக்கைகள் உள்ளன. அக்கோரிக்கைகள், 2024.12.31 ஆந்தேதியன்று அல்லது அத்தேதிக்குக் கிட்டிய தேதியன்று பெறப்பட்ட அல்லது 2024.12.31 ஆந்தேதியன்று அல்லது அத்தேதிக்குக் கிட்டிய தேதியன்று பெறப்பட்ட அல்லது அவை தொடர்பில் இயைபான அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் அறிவுறுத்தல்கள் அல்லது அவதானிப்புகள் பெறப்பட்ட அல்லது இன்னமும் கலந்துரையாடலின்கீழுள்ள கோரிக்கைகள் ஆகும்.

**04. மாகாணசபையின் நியதிச்சட்டங்கள்**

மாகாணசபைகள் தொடர்பிலான (ஆங்கிலம்/சிங்களம்/தமிழ்) மீளாய்வுகள் இயைபான மாகாணசபைகளுக்கு அப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அனுப்பப்பட்டிருக்கின்ற சட்டமூலங்கள் தொடர்பில் இயைபான மாகாணசபைகளிடமிருந்து அவதானிப்புகக்குக் காத்திருக்கின்ற 7 கோப்புகள் உள்ளன எவ்வாறாயினும், மாகாண சபைகள் தற்போது செயற்படாதிருப்பதனால் இயைபான கோப்புகள் மீதான கடிதங்கள் மேலதிக செயற்பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தல்களை பெறுவதற்கு இயைபான மாகாணசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கிணங்க, பல்வேறு கோப்புகள் அத்தகைய கோப்புகளை மேலும் பேணுவதற்கு இபையான மாகாணசபைகளின் அறிவுறுத்தல்களுக்கேற்ப திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## விசேட எய்துகைகள்

குறித்தளிக்கப்பட்ட வகிபங்கும் நோக்கெல்லையும் பரந்ததாகவிருக்கின்றபோதிலும், இவ்வகிபங்கை நிறைவேற்றுவதற்கு இத்திணைக்களத்தில் ஒப்பீட்டளவில் குறைவான பணியாட்டொகுதியினரே உள்ளனர். ஊழியர்கோப்பில் பல்லெண்ணிக்கையினவான வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும், அத்தகைய பிரச்சினைகளைப் பொருட்படுத்தாது இத்திணைக்களத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாகவும் பயனுறும்வகையிலும் புரிவதற்கு இயன்றதாகவிருத்தல் இத்திணைக்களத்துக்கு ஒரு விசேட எய்துகையாகவுள்ளது.

## சவால்கள்

(1) தாபனக்கோவையின் அத்தியாயம் XXXIII இன் பந்தி 2.2 இனது நியதிகளின்படி,*''அமைச்சரவை, அரசாங்கத்தின் சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தையும், பல்வேறு சட்டமூலங்கள் அறிமுகப்படுத்தும் முன்னுரிமை ஒழுங்குவரிசையையும் தீர்மானித்ததன்பின்னர், அமைச்சரவைச் செயலாளர் அமைச்சரவையின் முடிபை ஒவ்வொரு செயலாளருக்கும் சட்டவரைஞருக்கும் அவர்களின் தகவலுக்காக அறிவித்தல் வேண்டும்.''* மேலே குறித்துரைக்கப்பட்டவாறு எவ்வாறாயினும், முன்னுரிமை ஒழுங்குவரிசையைஅறிவிப்பது எதுவும் இற்றைத்திகதிவரை நடைபெற்றிருக்கவில்லையென்பதுடன் அமைச்சரவையின் ஏதேனும் வழிகாட்டுகையின்றி அரசாங்கத்தின் சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் சட்டவாக்கங்களின்முன்னுரிமை ஒழுங்குவரிசையை அடையாளங்காண்பது ஒரு சவாலாகவுள்ளது.

(2) தாபனக்கோவையின் அத்தியாயம் XXXIII இன் பந்தி 2.1 இனது நியதிகளின்படி,*''ஒரு வரைவுச் சட்டவாக்கத்துக்கான கோரிக்கையொன்று, எல்லா விடயங்களிலும், அவ்வரைவைத் தயாரிப்பதில் சட்டவரைஞரின் வழிகாட்டுகைக்காக இயன்றளவு மிகவும் முழுமையான அறிவுறுத்தல்களைக் கொண்டுள்ளவொரு குறிப்பறிக்கையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.''* எவ்வாறாயினும், கடந்த ஆண்டுகளின்போது, சட்டவாக்கங்களை வரைவதற்காகவும் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்காகவும் பல்வேறு கூட்டங்களில் சட்டவரைஞருக்கு வாய்மொழிமூலமான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான செயல்முறையொன்று படிப்படியாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. விதிவிலக்கான அவசரச் சட்டவாக்கத் தேவைகளுக்காக அவ்வகையினதான செயல்முறை பின்பற்றப்பட்டபோதிலும், அதனைப் பொதுவான செயல்முறையாக்குதல் திணைக்களத்துக்குச் சவாலாக வந்துள்ளது; ஏனெனில் சட்டவாக்கங்களை வரைவதற்காக வாய்மொழிமூலமான அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலானது, திணைக்களத்தில் அலுவலகமுறையான பதிவேடுகளைப் பேணுவதிலான சிரமம், அத்தகைய கூட்டங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின்போது தெளிவான மற்றும் இறுதியாக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பெறாமைமூலம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரைவுகளில் ஒவ்வாமைகளை உருவாக்குதல்போன்ற பின்விளைவுகளைக் கொண்டிருக்கும்.

(3) கடந்த அண்மைக் காலத்தில் பல அனுபவம்வாய்ந்த சிரேட்ட சட்டவரைஞர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளனர். இதனால் சிரேட்ட ஊழியர்கோப்புப் பதவிகளிலும் கனிட்ட ஊழியர்கோப்புப் பதவிகளிலும் அலுவலர்களின் எண்ணிக்கைக்கிடையே சமச்சீரின்மை உருவாக்கப்பட்டுள்ளது. உயர்தரத்தினவான சட்டவாக்கமொன்றைத் தயாரிப்பதற்கெனப் பல்லாண்டுகாலப் பரந்த அறிவையும் அனுபவத்தையும் சட்டவாக்கம் வரைதற் பணியின் தன்மை தேவைப்படுத்துவதனால், குறைந்த அனுபவம்வாய்ந்த பெரும்பான்மை எண்ணிக்கையினரான அலுவலர்களுடன் திணைக்களத்தின் இலக்குகளை எய்துவது அதற்குச் சவாலொன்றை ஏற்படுத்தியுள்ளது.

(4) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுள் 62 பதவிகள் வறிதாகவுள்ளனவாதலால் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பில் 1/3 வெற்றாகவிருப்பதுடன் அதன் செயல்நிறைவேற்றுகையின் முன்னேற்றத்தைப் பேணுவது ஒரு சவாலாகவுள்ளது. வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன ஆனால், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை காரணமாகச் சிறிது காலஞ்செல்கின்றது.

(5) திணைக்களத்துக்குப் புதிய ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படினும், திணைக்களத்தில் கணிசமானவொரு காலப்பகுதிக்குப் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களைத் தக்கவைப்பது திணைக்களத்துக்குச் சிரமமாக வந்துள்ளது; ஏனெனில் ஊழியர்கோப்புப் பதவிகளுள் பெரும்பாலானவற்றுக்குச் செலுத்தப்பட்ட ஊதியம், அத்தகைய பதவிகளிலுள்ள அலுவலர்களினால் புரியப்பட்ட வேலைப்பளுவுடனும் பணியின் அளவுடனும் ஒப்பிடுகையில் திருப்திகரமான மட்டத்திலல்ல.

**<u>எதிர்கால இலக்குகள்</u>**

(1) மேலே குறித்துரைக்கப்பட்ட சவால்களை மேற்கொள்வதற்கான வழிவகைகளைக் கடைப்பிடிப்பது நேரத்துக்கொத்த தேவையாக வந்துள்ளதாதலால், அதியுத்தமராம் சனாதிபதியின் செயலாளருடனும் மாண்புமிக்க நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருடனும் 2021 ஆம் ஆண்டில் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அத்தகைய கலந்துரையாடல்களின் விளைவாக, திணைக்களத்தை மீளக்கட்டமைப்பதற்கான முன்மொழிவுகளைக் கொண்டிருந்த 2021.12.15 ஆந்திகதிய 2021/Cab Memo/J/ADM/124 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று மாண்புமிக்க நீதி அமைச்சரினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையினால் தேசிய வேதன ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பணிப்புகளின்மீது அத்தகைய ஆணைக்குழு திணைக்களத்தின் ஊழியர்கோப்பை அதிகரிப்பதற்கான அதன் விதப்புரைகளை வழங்கியது. அதன்பின்னர், 2023-03-27 ஆந்திகதிய அமைச்சரவை முடிபுக்குப் பயன்கொடுத்து, மாண்புமிக்க நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு

மறுசீரமைப்பு அமைச்சர், 2023-04-28 ஆந்திகதிய 2023/Cab Memo/J/ADM/53 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பறிக்கையை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார்; சட்டவரைஞர் திணைக்களத்தை மீளக்கட்டமைப்பதற்கான முன்மொழிவுகளைக் கவனத்துட்கொள்வதற்கு ஒரு குழுவை நியமிப்பதற்கு அது முன்மொழிவுகளைச் செய்தது. 2023-05-10 ஆந்திகதிய அமைச்சரவை முடிபினால் இது அங்கீகரிக்கப்பட்டது.

2023.05.16 ஆந்திகதிய கடிதத்தின்மூலம் நீதியமைச்சின் செயலாளர், அமைச்சரவையின் முடிபைச் சட்டவரைஞருக்கு அறிவித்து, குழுவானது 2023.05.08 ஆந்திகதியன்று நியமிக்கப்பட்டது. பல கூட்டங்களுக்குப்பின்னர் குழு அதன் இறுதி அறிக்கையை 2023.08.16 ஆந்திகதியன்று நீதியமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்தது. அதன்மீது அமைச்சரவையின் முடிபு 2023.09.20 ஆந்திகதியன்று நீதியமைச்சின் செயலாளரினால் சட்டவரைஞருக்கு அறிவிக்கப்பட்டது.

அதற்கிணங்க அவற்றுக்கு உடனடியாக பயன்கொடுக்கக்கூடியதாக இருந்த குழுவின் குறித்த சில விதப்புரைகளுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன என்பதுடன் திணைக்களத்தினுள் கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட மனித மற்றும் பௌதிக வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டின் ஊடாக படிப்படியான முறையில் குழுவின் விதப்புரைகளுக்கு பயன்கொடுப்பதற்கென ஒழுங்கேற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மேலே குழுவின் விதப்புரைகளைப் பின்பற்றி திணைக்களத்திலுள்ள சட்ட அலுவலர்கள் மற்றும் சிரேட்ட அலுவலர்களின் முழுமொத்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பானது தலைமையதிபதியினால் சிரேட்ட சட்ட வரைஞர்களின் பதவிகளுக்கான எண்ணிக்கையை 8 தொடக்கம் 12 வரையாக திருத்துவதற்கு 2024.05.10 ஆந்தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இப்பதவிகளுக்கான பதவியுயர்வுகளை வழங்குவதற்கு ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

அதேபோன்று குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க திணைக்களத்தினது நிர்வாகக் கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியை நிறுவுவதற்கான வேண்டுகோளானது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் 2024.05.10 ஆந்தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இப்பதவிக்கான அலுவலர்களை நியமிப்பதற்கும் மற்றும் குழுவின் எஞ்சியுள்ள விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கும் ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

(2) திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகையை அதிகரிப்பதற்குச் சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு திறமைவாய்ந்த, வினைத்திறனான மற்றும் ஆற்றலுடைய அலுவலர்களை ஈர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்தல், காலத்துக்கொத்த, அவசரத் தேவையாக வந்துள்ளதாதலால், மாண்புமிக்க நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருடனான பல கலந்துரையாடல்களின்பின்னர், 2023.10.02 ஆந்திகதியன்று மாண்புமிக்க நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைசரினால் அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று அமைச்சரவைக்குச் சமா்ப்பிக்கப்பட்டது; சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக்களத்தின் அலுவலர்கள் சேவையில் ஒத்த தரங்களிலுள்ள அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்ட அதே தொகைகளில், சட்டத்துறைத் தலைமையதிபதியின் அலுவலர்கள் சேவையிலுள்ள சட்ட அலுவலர்களுக்கு ஏலவே செலுத்தப்படுகின்ற குறித்தசில படிகளைச் சட்டவரைஞர் சேவையின் அலுவலர்களுக்குச் செலுத்துவதற்கான முன்மொழிவுகளை இது கொண்டிருந்தது. அமைச்சரவையின் இறுதி முடிபு இதுவரை அறிவிக்கப்படாததனால், சர்வதேசப் பண நிதியம் மற்றும் உலக வங்கி முன்மொழிவுகளின்கீழ் சட்டச் சீர்திருத்தங்களுக்கான தேவைப்பாடுகளின் விளைவாகத் திணைக்களத்தினால் தற்போது கையாளப்படும் பெருமளவிலான வேலைப் பளுவைக் கருத்திற்கொண்டு, அதற்கான சாதகமான பதிலைத் திணைக்களம் காத்திருக்கின்றது.

கணக்காய்வு அலுவலர்/திணைக்களத் தலைவர்:
பெயர்:
பதவி:
திகதி:

Dilrukshi Samaraweera
President's Counsel,
Legal Draftsman,
Legal Draftsman's Department,
No. 80, Adhikarana Mawatha,
Colombo 12.

61

# அத்தியாயம் 03 –ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயல்நிறைவேற்றுகை

## 3.1 நிதிச் செயல்நிறைவேற்றுகைபற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 157,148,000 | 137,847,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 974,740 | 584,314 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 4,982,650 | 6,474,230 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **163,105,390** | **144,905,544** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **163,105,390** | **144,905,544** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **441,317** | | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **162,664,073** | **144,905,544** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | ஏசீஏ-2(ii) |
| 109,228,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 99,489,848 | 86,349,025 | ஏசீஏ-2(ii) |
| 61,082,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 53,689,512 | 49,012,137 | ஏசீஏ-2(ii) |
| 450,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 430,040 | 506,002 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| **170,760,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **153,609,400** | **135,867,164** | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | ஏசீஏ-2(ii) |
| 1,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 996,711 | 58,616 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 4,000,000 | திறன் விருத்தி | 14 | 999,501 | 1,858,657 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| **5,000,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **1,996,212** | **1,917,273** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 564,050 | 522,004 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 5,200,990 | 4,351,884 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **5,765,040** | **4,873,888** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **161,370,652** | **142,658,325** | |
| **175,760,000** | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **1,293,421** | **2,247,219** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | **1,293,421** | **2,247,219** | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |

28 FEB 2025

1

## 3.2 2024 திசெம்பர் 31 அன்றுள்ளவாறுநிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 101,276,846.00 | 100,325,237.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 10,091,554.00 | 9,873,214.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **111,368,400.00** | **110,198,451.00** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 9,618,554.00 | 9,810,904.00 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 101,276,846.00 | 100,325,237.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 473,000.00 | 62,310.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **111,368,400.00** | **110,198,451.00** |

பக்க இலக்கம் 7 முதல் 27 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 28 முதல் 49 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன**. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | பதவி : |
| திகதி : 28/02/2025 | திகதி : 2025/02/24 | திகதி : 2025/02/21 |

Ayesha Jinasena, P.C.
Secretary
Ministry of Justice and National Integration
No: 19, Sri Sangaraja Mawatha,
Colombo 10.

දිල්රුක්ෂි සමරවීර
ජනාධිපති නීතිඥ,
නීති කෙටුම්පත් සම්පාදක,
නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව,
තැ.පෙ. 80, අධිකරණ මාවත,
කොළඹ 12.

ජී. එම්. පී. නිලන්ති
ප්‍රධාන ගණකාධිකාරී
නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව
කොළඹ 12

2

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

### 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
### காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024<br>ரூபா | 2023<br>ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 4,581,768 | 5,439,377 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 157,148,000 | 137,847,000 |
| முற்பணங்களை அறவிடல் | 5,201,647 | 5,127,320 |
| வைப்புக்களின் பெறுகை | 974,740 | 584,314 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **167,906,155** | **148,998,011** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 152,841,955 | 135,234,588 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 430,040 | 506,002 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 6,546,251 | 6,466,260 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 441,317 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 5,114,190 | 4,351,884 |
| வைப்புக் கொடுப்பனவு | 564,050 | 522,004 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **165,937,803** | **147,080,738** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) =(அ)-(ஆ)** | **1,968,352** | **1,917,273** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | |
| பங்கு இலாபம் | - | |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | 27,860 | |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **27,860** | **-** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதன செலவினம் | 1,996,212 | 1,917,273 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **1,996,212** | **1,917,273** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) =(ஈ)-(உ)** | **(1,968,352)** | **(1,917,273)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | | |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) =(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ) =(எ) +(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

3

**3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**அறிக்கையிடுதலின் அடிப்படை**

1. அறிக்கையிடுதற் காலப்பகுதி

இந்நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையிடுதற் காலப்பகுதி 2024 சனவரி 1 ஆந்தேதியிலிருந்து திசெம்பர் 31 ஆந்தேதிவரையாகவுள்ளது.

2. அளவீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்களானவை, வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, குறித்தசில சொத்துக்களை மீளப்பெறுமான மதிப்பீடுசெய்து திரிபுபடுத்தப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடுவதன்மூலம் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுமுறையான ஆகுசெலவின்மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களின் எண்கள், மிகக்கிட்டிய ரூபாவுக்கு நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்படுகின்றன.

3. அரசிறையை அடையாளங்காணல்

செலாவணி மற்றும் செலாவணி சாரா அரசிறைகள், இயைபான அரசிறைக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது பணப் பற்றுச்சீட்டுக்களின்மீது அடையாளங்காணப்படுகின்றன.

4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்களை (ஆபொமற்றும்சா) அடையாளங்காணலும் அளவீடுசெய்தலும்

ஆதன, பொறித்தொகுதி மற்றும் சாதன இனமொன்று, சொத்துக்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மை உருவகத்தைச் சென்றடைந்து சொத்துக்களின் ஆகுசெலவை நம்பகமானமுறையில் அளவீடுசெய்யமுடியுமென்பது நிகழ்தகவாக இருக்கும்போது அடையாளங்காணப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் ஆகுசெலவில் அளவீடு செய்யப்படுவதுடன் ஆகுசெலவு மாதிரி ஏற்புடையதாக இராதபோது மீள்பெறுமானமதிப்பீட்டு மாதிரி ஏற்புடையதாக்கப்படுகின்றது.

5. <u>ஆதன, பொறித்தொகுதி மற்றும் சாதன ஒதுக்கு</u>

இந்த மீள்பெறுமானமதிப்பீட்டு ஒதுக்குக் கணக்கு, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்களின் நேரொத்த கணக்காகவுள்ளது.

6. <u>பணமும் பணத்துக்குச் சமமானவையும்</u>

பணமும் பணத்துக்குச் சமமானவையும் 2024 திசெம்பர் 31 ஆந்தேதியன்றுள்ளவாறு கையிலுள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகளை உள்ளடக்கும்.

### 3.6 அரசிறைச் சேகரிப்பின் செயல்நிறைவேற்றுகை

ரூபா ,000

| அரசிறைக் குறியீடு | அரசிறைக் குறியீட்டின் விவரணம் | அரசிறை மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட அரசிறை | |
|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி அரசிறை மதிப்பீட்டின் %மாக |
| ஏற்புடையதல்ல | | | | | |

### 3.7 குறித்தொதுக்கல் பயன்பாட்டின் செயல்நிறைவேற்றுகை

ரூபா .000

| குறித்தொதுக்கலின் வகை | மானியக்கொடைகள் | | உள்ளபடியான செலவினம் | இறுதி மானியக்கொடைகளின் % மாக பயன்படுத்தப்பட்ட மானியக்கொடைகள் |
|---|---|---|---|---|
| | மூல மானியக்கொடை | இறுதி மானியக் கொடை | | |
| மீண்டுவரும் செலவினம் | 161,400 | 170,760 | 153,609.39 | 89.96% |
| மூலதனச் செலவினம் | 5000 | 5000 | 1.996.21 | 39.92% |

### 3.8 நி.ஒ. 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்களின்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்துக்கு/மாவட்டச் செயலகத்துக்கு/மாகாணசபைக்கு அளிக்கப்பட்ட மானியக்கொடைகள்

ரூ. ,000

| தொடர் இல. | எந்த அமைச்சிலிருந்து /திணைக்களத்திலிருந்து மானியக் கொடைகள் பெறப்பட்டது | மானியக் கொடையின் நோக்கம் | மானியக் கொடை | | உள்ளபடியான செலவினம் | கொடுக்கப்பட்ட இறுதி மானியக்கொடை களின்% மாக பயன்படுத்தப்பட்ட மானியக் கொடைகள் |
